# ஆசிரை

## கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

இயேசுவின் பிறப்பு விழாவை கொண்டாடுவதற்கு ஆயத்தமாகும் இந்த நாட்களில், முக்கியாக இயேசு ஏன் இவ் உலகிற்கு வந்தார் என்ற அடிப்படைக் கேள்வியை கேட்கும் பொழுது எங்கள் எண்ணங்களிலே வருவது, எல்லோரையும் விடுவிப்பதற்காக அதாவது முழுமையான விடுதலையை இவ்வுலகிற்கு கொண்டு வருவதற்கு இயேசு இந்த உலகத்திலேயேபிறந்தார். “விடுதலை”என்பதன் பொருள் அடிமைத் தனத்திலிருந்து மீண்டெழுதல். அடிமைத்தனம் பலவகைகளில் கருதப்படுகின்றது. முக்கியமாக சமூக, அரசியல், ஆண்மீகம், பொருளாரதார அடிமைத்தனங்களென்று வகைப்படுத்தலாம். இவை ஒவ்வொன்றிலுமிருந்து விடுதலை பெறுகின்ற போது முழு மனித விடுதலையை பெறறுக் கொள்ளமுடியும். சமூக அடிமைத்தனம் என்கின்ற பொழுது சமூகத்திலே புரையோடிக்கொண்டிருக்கும் சமூக தீமைகளுக்கெதிராக செயல்பட்டு உண்மையான சமூகத்தை கட்டியெழுப்பும் பொழுது சமூக விடுதலையை நோக்கி பயணிக்கின்றோம் என்பது துல்லியமாகத் தெரிகின்றது. ஒவ்வொன்றும் அதன் அதன் தீமைகளை இனங்கண்டு அதற்கெதிராக போராடும் பொழுது முழு மனித விடுதலையை நோக்கிப் பயணிக்கமுடியும். அடிப்படையில் மனிதன் தன்னுடைய தனிப்பட்ட அடிமைத்தனத்திலிருந்து வெளிவர வேண்டும். சொந்த பாவபழக்கவழக்கங்கள், தீமையான சிந்தனைகள், உலகபோகஎண்ணங்கள், ஆடம்பரமான போக்குகள் போன்றவற்றிலிருந்து ஒருமனிதன் விடுதலை அடையும் பொழுது முழுமனிதவிடுதலைக்கான வித்தாக அமைகிறது. “சிறுதுளி பெருவெள்ம்” அதாவது ஒருதனிமனிதன் தான் தன்னுடையஅடிமைத்தனத்திலிருந்து விடுதலை அடையும் பொழுது முழு சமூகமும் விடுதலை அடையும். எல்லா பிரிவுகளிலிருந்து விடுதலையை நோக்கிய பயணம் ஆரம்பிக்கும். அப்போது இயேசுவின் விடுதலையாகிய முழு மனிதவிடுதலையை அடைய முடியும். இதுதான் கிறஸ்மஸ் விழாவின் அர்த்தமாகவும் இருக்கும். தனிப்பட்ட ஒருவரின் விடுதலையை ஒட்டுமொத்தமனிதகுலத்தின் விடுதலைக்கு ஆரம்பபுள்ளியாக அமையும்.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
**Parish Priest**
**Our Lady of Deliverance Tamil Catholic Mission**
**Montreal (QC), Canada.**